[1975 மார்ச் 11

செய்யும்போது கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். போகப் போக அதிகமாக சிப்பந்திகள் இருந்தால் அவர்களுக்கு எல்லாம் வேறு வேலை தேடிக் கொண்டு எங்கெங்கு சீர்திருத்தம் தேவையோ அங்கங்கே செய்யலாம்.

திரு. சோ. அழகர்சாமி : பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தலை நடத்தும் காலம் முடிவு செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். காலத்தை முடிவு செய்யவில்லை என்றாலும் யூனியன் தலைவர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்களா அல்லது ஊராட்சி மன்றத் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: முன்பே இந்தக் கேள்வி கேட்டார்கள். இது பற்றிப் பின்பு யோசிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது திரு. சுப்பிரமணியம் அவர்கள் ஏற்கனவே கேட்ட கேள்வி. மற்ற உறுப்பினர்கள் என்ன கேள்வி கேட்கிறார்கள் என்று கவனிக்க வேண்டும். இந்தத் துணைக் கேள்விக்கு ஏற்கனவே அமைச்சர் அவர்கள் "ஆய்வில் இருக்கிறது" என்று பதில் சொன்னார்கள்.

சின்கோனா உற்பத்திக் கழகம்.

*279 வினா—திரு. இ. ராமசாமி : மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசினர் சின்கோனா, கொய்னா தோட்டங்களை இணைத்து ஒரு கார்ப்பரேஷனை அமைக்கும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன்: ஆம்.

தாவரங்களிலிருந்து வாசனைப் பொருள்கள்

*280 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு கைவசம் உள்ள காடுகளில் வாசனைப்பொருள்கள் தயாரிப்பதற்கு உபயோகப்படக்கூடிய மரம், செடி, கொடிகள் வளர்க்கப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு ஓ.பி. இராமன்: ஆம். சந்தனம், தைல மரங்கள், பர்சுரா, எலுமிச்சை புல், இலவங்கம், ஜெரானியம் முதலியவைகள் பயிரிடப்படுகின்றன.

திரு. ச. சங்குமுத்துத் தேவர்: தமிழ்நாட்டில் எந்தெந்த பாகங்களில் இதுபோன்ற மரங்கள் வளர்க்கப்படுகின்றன? திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்கு மலைத் தொடர் பகுதியில் இந்த மாதிரி செடிகள் வளர்க்கப்படுகின்றனவா?